திமுக
தகவல் தொழில்நுட்ப அணி

அண்ணா அறிவாலயம்,
எண். 367/369, அண்ணா சாலை, தேனாம்பேட்டை,
சென்னை – 600018

# திமுக தகவல் தொழில்நுட்ப அணி

## முக்கிய அறிவிப்பு

நடைபெற உள்ள தமிழக சட்டமன்ற பொதுத்தேர்தலுக்காக தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்ட இறுதிகட்ட வாக்காளர் பட்டியலின்படி, தமிழகத்தில் 3,08,38,473 ஆண் வாக்காளர்களும், 3,18,28,727 பெண் வாக்காளர்களும் உள்ளனர். இதன் மூலம் ஆண் வாக்காளர்களை விட 9,90,254 பெண் வாக்காளர்கள் அதிகமாக இருப்பது தெரிய வந்துள்ளது.

மேலும், தமிழகம் முழுவதுமுள்ள கழக நிர்வாகிகள் பலரும், சிறப்பாக செயல்பட்டு வரும் நமது தகவல் தொழில் நுட்ப அணியில் மகளிரின் பங்களிப்பு பிரத்யேகமாக இருந்தால், பெண் வாக்காளர்களை அணுகுவதற்கு ஏதுவாக இருக்கும் என்று அவரவர் கருத்துக்களை முன்வைத்திருந்தனர்.

இவையனைத்தையும் கருத்தில் கொண்டும், கடந்த தேர்தல்களில் பதிவான வாக்குகளின் அடிப்படையிலும், தேர்தல் முடிவுகளை தீர்மானிப்பதில் பெண் வாக்காளர்களே மிகப்பெரும் சக்தியாக விளங்கி வருகின்றனர் என்பதைக் கண்டறிந்து கழகத்தலைவர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றோம்.

இதனடிப்படையில், நடைபெற உள்ள தமிழக சட்டமன்ற பொதுத்தேர்தலுக்கான கழகப் பணிகளில் தகவல் தொழில்நுட்ப அணியில் மாவட்டம் முதல் பாகம் வரை பிரத்யேகமாக மகளிர் பொறுப்பாளர்களை மட்டுமே கொண்ட, **தகவல் தொழில் நுட்ப அணி - மகளிர் பிரிவு *(DMKITWING- WOMEN'S NETWORK)*** ஒன்றை துவங்கிட கழக தலைவர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்.

இந்த தகவல் தொழில் நுட்ப அணி - மகளிர் பிரிவு *(DMKITWING- WOMEN'S NETWORK)* மூலம், சமூக வலைதளங்களில் உள்ள பெண் வாக்காளர்களை எளிதாக அணுகி, நமது கருத்துக்களைப் பகிர்ந்தும், அவர்களின் கருத்துக்களைப் பெற்றும், அவற்றை நாம் தேர்தல் களத்தில் பயன்படுத்திக்கொண்டு நமது வெற்றி வாய்ப்பை அதிகரிக்க முடியும்.

ஏற்கனவே நம்மிடம் உள்ள நிர்வாக கட்டமைப்பைப் போலவே, இந்த அமைப்பிலும், மாவட்ட பொறுப்பாளர் முதல் பாகம் வரையிலான பொறுப்பாளர்கள் வரை நியமிக்கப்படுவார்கள். இதில் முற்றிலும் மகளிர் மட்டுமே பொறுப்பமர்த்தப்படுவர். மேலும், இந்த அமைப்பிற்காக தகவல் தொழில்நுட்ப அணியின் தலைமை அலுவலகத்திலேயே மண்டல வாரியாக பெண் அலுவலர்களும் நியமிக்கப்பட உள்ளார்கள். ***(Women HRD Team)* .**

முதற்கட்டமாக மாவட்ட பொறுப்பாளர்கள் மற்றும் மாவட்ட துணை பொறுப்பாளர்கள் ஆகிய நிலைகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பங்களை **dmkitwing.in** என்ற இணையதளத்தில் வடிவத்தை *(form)* பூர்த்தி செய்ய வேண்டும்.ஏற்கனவே தகவல் தொழில் நுட்ப அணியின் நிர்வாகப் பொறுப்பில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

திமுக
தகவல் தொழில்நுட்ப அணி

அண்ணா அறிவாலயம்,
எண். 367/369, அண்ணா சாலை, தேனாம்பேட்டை,
சென்னை – 600018

**பொறுப்புகளுக்கான தகுதிகள்:**

*1. கழக உறுப்பினராக இருக்க வேண்டும்.*

*2. சமூக வலைதளங்களில் ஈடுபாடு கொண்டவராக இருக்க வேண்டும். ( Facebook, Twitter, YouTube, WhatsApp )*

*3. குறைந்தபட்ச கல்வித்தகுதி : மேல்நிலைக்கல்வி (+2) முடித்தவராக இருக்க வேண்டும்.*

*4. 35 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.*

*5. கணிணி மற்றும் ஆண்ட்ராய்டு செல்பேசி பயன்படுத்த தெரிந்தவராக இருக்க வேண்டும்.*

*கழகத்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின் படி மேற்கூறிய தகுதிகள் கொண்ட விண்ணப்பதாரர்கள் நேர்முகத்தேர்விற்குப் பிறகு அந்தந்த மாவட்ட கழக செயலாளர்களின் ஒப்புதலோடு நியமிக்கப்படுவர்.*

*தந்தை பெரியார் – அறிஞர் அண்ணா – முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோரின் அடியொற்றி, கழகத்தலைவர் அவர்களின் வழிகாட்டுதலோடு இந்த சமூகத்தில் மகளிரின் குரல் ஓங்கி ஒலிக்கவும், மாறிவரும் நவீன தொழி நுட்பத்திற்கேற்ப தன்னை தகவமைப்பதிலும் முன்னனியில் இருக்கும் திமுக தகவல் தொழில் நுட்ப அணியில் மேற்கொள்ளப்படும் இத்தகையதொரு சீரிய முயற்சிக்கு அனைவரும் ஒத்துழைப்பு தந்து, தகவல் தொழில் நுட்ப அணியின் பணிகள் மற்றும் செயல்பாடுகள் வலுப்பெற உறுதுணையாக இருக்க வேண்டுமாய் அன்புடன் வேண்டுகிறேன்.*

இப்படிக்கு

முனைவர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், எம்.எல்.ஏ

செயலாளர்

தி.மு.க தகவல் தொழில்நுட்ப அணி

அண்ணா அறிவாலயம்

சென்னை

*நாள் : 05-02-2021*

தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி